Koviloor Acadamy

நாட. 84

காமினி

அரிய இனிய காவிய நாடகம்

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN
PAGANERI.

5514

KVC0401.

ஸ்ரீ ச. து. சுப்பிரமணிய யோகியார்

Koviloor Acadamy

விலை அணா—12

Koviloor Acadamy

காமினி

(அரிய, இனிய காவிய நாடகம்)

ஸ்ரீ ச. து. சுப்பிரமணிய யோகியார்

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

விற்பனை உரிமையாளர்:
ஓம்கார நூலகம்
பதிப்பகம் :: புதுக்கோட்டை
திருச்சி ஜில்லா.

KVC0A01

★

ஸ்டார் பிரசுரம்,
பாலக்கரை :: :: திருச்சி.

Koviloor Acadamy

பதிப்புரிமை
முதற் பதிப்பு: அக்டோபர், 1946.

Madras Ripon Press, Ramachandrapuram, Pudukkottai (State.)
For Star Publications :: P. I. Card, Ty-9-A.

Koviloor Academy

பதிப்புரை

"காமினி" என்னும் இந்த அரிய, இனிய காவிய நாடகத்தின் (Epic Playlet) முதற் பதிப்பைக் கலாதேவிக்கு அர்ப்பணிக்கின்றோம். தமிழுக்குப் பொன்றாப் புகழைப் பொலிவிக்கப் பல புதிய காவிய நாடகங்கள் தமிழில் உண்டாக வேண்டும். அவை எளிய இனிய நடையில், புதிய அணி, புதிய அமைப்பு, புதிய கற்பனையுடன் மிளிர வேண்டும்.

இதனாசிரியர் ஸ்ரீ ச. து. சுப்பிரமணிய யோகியார், தமிழ்க் கவிதை புலகில் புதியவரல்லர் : அவரது கவிதைச் சிறப்பை, "தமிழ்க் குமரி" என்னும் அன்னார் பாடிய காவியத்தால் தமிழகம் நன்கறிந்துள்ளது.

"தேவி தந்திரம்" என்னும் பழைய கிரந்த நூலில் வரும் ஒரு சிறு கதையை எடுத்துக்கொண்டு, அதைக் காலத்திற் கேற்றவாறு கற்பனை செய்து, புதிய முறையில் ஆசிரியர் இதனைப் பாடியுள்ளார். கதை பழமையான தெனினும், கருத்து மிகமிக உயர்ந்தது; கனிவு நிறைந்தது; காம்பீர்யம் மிக்கது; பாரத சமுதாயத்தின் நிலையான ஆன்மீக தருமத்தை அடிப்படையாகக் கொண்டது. இது மனிதவுள்ளத்தின் எளிமையையும், தெய்வத் திருவருளின் பெருமையையும், பக்தி பரவசத்தின் வலிமையையும் தெள்ளிதின் உணர்த்துவது. இதன் கதைச் சுருக்கத்தைத் தனியே காண்க.

ஆங்கிலத்தில் புலவர்மணி மெடர்லிங் என்பவர் இயற்றிய "Sister Beatrice" (சகோதரி பெட்ரிஸ்) என்னும் நாடகத்தைத் தழுவி, இக் காமினி நாடகத்தின் காட்சிக்கோப்பையும் நாடகப் பாங்கையும், ஸ்ரீ யோகியார் அமைத்துள்ளார். இதை ஆங்கிலத்தில் "Libretto (Long Musical Work) என்பர். நம் நாட்டு வழக்கப்படி நமது நாடக நூல்களிற் கூறியுள்ள பத்து வகையான நாடகங்களில் இது, "வியோகம்" எனத் தகும். இந் நாடகம், நடிகனை ஆதர்சமாய்க் கொண்டதல்ல : நடிகையை ஆதர்சமாய்க் கொண்டதாதலின், இதனை "நாடிக வியோகம்" என்பது பொருத்தமாகும்.

இவ்வினிய பக்தி பரவச 'நாடிக வியோக நாடகம்' தமிழ்த் தாய்க்கு நல்ல அணியாகுக!

திருச்சி
15—10—1946 ஸ்டார் பிரசுரம்.

எண்: ௩௨ — ௧ — ௩௰

Koviloor Academy

நாடகப் பாத்திரர்

1.	காஞ்சனன்	... காதலன்
2.	காமினி	... காதலி, கதாநாயகி
3.	கன்யாப் பெண்கள்	... காமினியின் தோழிகள்
4.	தலைவி	... கன்னியாமாடத் தலைவி
5.	குரு	... கன்னியாமாடத் தலைவர்
6.	ஈஸ்வரி	... தேவிகோயில் அம்பிகை.

இடம் { கன்னியா மாடம்
தேவி கோயில்

Koviloor Acadamy

காமினி கதைச் சுருக்கம்

காமினி, அன்னை கோயிலின் கன்யாஸ்ரமத்துக் கன்னிகை களில் ஒருவள்; தாயற்றாள், தந்தையற்றாள், உற்றார் உற வினர் ஒருவரும் இல்லாதவள், அநாதை; சின்னஞ் சிறு வயதி லேயே அன்னையிடம் அடைக்கலம் புகுந்தவள்; தாயற்ற தனக்கு ஈஸ்வரியையே தாயாகக் கொண்டாள். அவளையும் ஆண் அதமன் ஒருவனது பேய்த் தன்மைகொண்ட காமம் பீடித்தது; மாயை தன் வலையை வீசியது; பிறந்தகம் நீங்கிப் புக்ககம் செல்லும் புதுப் பெண் போல, புவியின் பொய்ப் போகப் புன்மையில் பல வருஷங்கள் ஆழ்ந்தாள். ஆசை அவளை மோசம் செய்தது; மோகச் சிறுமைகள் அவளை முட் களாய்த் தைத்தன; போகம் அவள் மேனியைப் புண்ணாக் கியது. யாவர்க்கும் தாயான அம்பிகையை விட்டு நீங்கிய அவ ளைப் பாவத்தின் தாயான மாயை என்னும் மாமி, பலபடியாகச் சின்னபின்னமாய்த் திக்குமுக்காட வைத்தாள்! இவ்வளவிலும் ஸர்வேஸ்வரியை அவள் மறக்கவில்லை; அவளது நம்பிக்கை மாறவில்லை; பக்தி குறையவில்லை; இளமை கழிந்தது, வளமை மறைந்தது, உடலும் தளர்ந்தது; உயிரும் ஒடுங்க வேண்டிய காலம் அணுகியது; அவள் அன்னையின் காலடியிலே தன்னைத் தானே அர்ப்பணம் செய்ய மறுபடியும் வருகிறாள்; அன்னையாம் அம்பிகையும் அவளை ஏற்றுக் கொள்வதோடு, முக்தியும் கொடுத்து ஏற்றம் புரிந்தாள்!

காமினி, பாவம் செய்தவள் தான்; பழியின் சிக்கலான பாதைகளில் வழியறியாது திண்டாடியவள் தான். உலகத்தார் அவளைப் 'பாவி, பழிகாரி, பதிதை, பாசாங்குக் கள்ளி, காட்சிக் கினிக்கும் கடுவிஷக் கருநாகம், பசுத்தோல் போர்த்துப் பசப்பும் பழம் புலி' என்றெல்லாம் கருதி யிருப்பர்; எனினும், அவள்

Koviloor Acadamy

உள்ளம் கள்ளங் கவடற்ற குழந்தை யுள்ளம்; அவள் அன்பு தாயிடம் சேய்க்குள்ள தனியன்பு; சிக்கலான மாயையின் சூறையிற் சிக்கினும் பக்தியின் சுடர் அவியவில்லை; உலக போகச் சிறுமைகளாம் வெறுமையான வெறிக்கூத்து, உடலைக் கலக்கியது, உள்ளத்தை உலுக்கியது; அவ்வளவு தான்; உயிரிலே மலர்ந்த உறுதியைக் குலைக்கவில்லை, அமைதியை அசைக்க முடியவில்லை.

> "எத்தவத்தைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
> முத்தர் மனமிருக்கும் மோனத்தே—தத்திக்
> காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலும்
> தாதிமனம் நீர்க்குடத்தே தான்"

என்ற ஸ்ரீ பட்டினத்தடிகளின் சீரிய வாக்கின் சிறந்த இலக்கணமாய் நின்றவள் காமினி. பாவத்தூடும் பழியூடும் பராசக்தியையே துணையாய்க் கொண்டு பரம நிலையை நோக்கி நடந்தாள்; பவித்திரமாய்த் திகழ்ந்தாள்.

அவளுக்காகத் தேவி, 'திருடி' என்று பட்டம் பெற்றாள்: சிறையிலே கட்டுண்டாள், தெருத்தெருவாய் இழுத்துச் செல்லப் பட்டாள்! உற்ற தோழியர் ஏசவும், ஊரிலுள்ளோர் பேசவும், உயர்ந்தோர் கூசவும், தாழ்ந்தோர் காசாசை கொண்ட வேசை யென்று கருதவும், தன்னை நீங்கிய தன் தனையையின் ஸ்தானத்திலே, தானே காமினியாய்க் கொலைத் தண்டனையும் விதிக்கப் பெற்றாள்! கால கால கபாலியான காளியையா கொலை செய்ய முடியும்? வானம் வெடித்தது, வையம் இருண்டது, தம்பித்தது, வான் மலர்கள் பொழிந்தன, வானிசை பாய்ந்தது, வானவர் வந்தார், மண்ணகம் மலர்ந்தது! காமினியா யிருந்த ஈஸ்வரி தன் தெய்விகமான திவ்யரூபத்திலே நின்றாள்; ஈஸ்வரன் தன் காதலியைக் கட்டியணைத்தான்; கணத்தில் கரைந்தது கண் கொள்ளாக் காட்சி! பராசக்தியே காமினியாய்த் தன்னுடைய பணி விடைகளைத் தானே செய்துகொண்டு, கன்னியின் வரவுக்காகக் காத்திருந்தாள்; அவள் வந்ததும் அவளை ஏற்றுக்கொண்டாள்

Koviloor Acadamy

உலகத்திலே பொதுவாய்ப் பக்தன், பாடுபட்டுப் பரமனைத் தேடுகிறான்; பழியஞ்சுகிறான்; பாவத்தைக் கண்டு விலகுகிறான்; இங்கோ, பக்தையான காமினி பழிசெய்கிறாள், பாவம் பல புரிகிறாள்; அவள் பரமனைத்தேட வில்லை; பரமேஸ்வரியையே தாயாய்க் கொண்டாள்; பாரம் முழுவதையும் அவளுக்கே அர்ப்பணம் செய்தாள்; பக்தி பூர்வமான நம்பகத்திலே உறுதியாய் நின்றாள்! பாவம், பழி யாவற்றையுக் தாண்டி, பக்தியின் பெருமை அவளுக்கு முக்தி கொடுத்தது!

பாடுபடும் பக்தனை ஈஸ்வரன் ஈற்றிலே ரக்ஷிக்கிறார்; அது வரையில் அவனைப் பல படியாகச் சோதிக்கிறார். ஆனால், இங்கோ தன் பக்தைக்காகப் பராசக்தி படாத பாடெல்லாம் படுகிறாள், பழியும் ஏற்கிறாள்! இதுவே, இக்கதையின் புதுமை; இதுவே, இதன் உன்னதமான உயரிய லக்ஷ்யம். காமினியைப் போன்ற கள்ளங் கவடற்ற பக்தி பரவசம் எங்கணும் பெருக அடியேனது அன்னையாகிய அம்பிகை அருள் புரிவாளாக!

ஆசை மிகுதியாலேயே இந்நாடகத்தை எழுதியுள்ளேன். அறிவுப் பெருக்காலல்ல. நவையுளதேல் நவம் பொறுக்க!

—ஸ்ரீ யோகி

Koviloor Acadamy

Koviloor Acadamy

காமினி

(காவிய நாடகம்)

களம் க : காட்சி க:

[கன்யா மாடத்தில் உள்ள தேவி கோயில். தேவியின் திருமுன்னர் மண்டியிட்டவாறு காமினி தோத்திரம் செய்கிருள்–]

காமினி

(கண்ணிகள்)

அம்பிகையே! தாயே! அகிலாண்ட கோடியெல்லாம்
நம்பி வலம்செய்யும் நாயகியே! உன்னுடைய
கோடானு கோடிக் குழந்தைகளில் – நான் ஒருவள்!
வேதம் அறியேன்; வேறுநூல் பார்த்ததில்லே;
யாதும் அறியேன், அம்மா! உன் பாதங்கள்
அல்லாமல் வேறே கதியில்லே; யான் என்றும்
உன் குழந்தை; உன்னடிக்கீழ் ஒடுங்கும் அடிமைச்சி;
என்னைப் படைத்தவள் நீ, என்னுள் இருப்பவள் நீ,
என் ஆசைப் பம்பரத்தை ஆட்டுவதும் நீயன்றே?

[கோயிலில் அர்த்தஜாம மணியோசை]

ஆஹாஹா! கோயில் அரைஜாம மணியோசை
யான் சொல்லும் வார்த்தைகளே அநுநாதம் செய்கிறது!
அன்றொரு நாள் இன்றேபோல் அந்தி மயங்கிற்று
நட்சத்திரக் கோவை நாற்புறமும் தாவிற்று!
வானத்துச் சந்திரிகை வையத்தின் மீதுள்ள
நீர்ப்பரப்பி லெல்லாம் நீந்திவிளை யாடிற்று;
பத்தாண்டு முன்னல் பாவையென் சின்னநெஞ்சு
புத்தம் புதிதாய் உன் பொன்னுருவைக் கண்டதுகாண்!
சின்னஞ் சிறுவர்கள் சிறுமியர்கள் இவரோடு

Koviloor Acadamy

சில்லறைச் சேட்டைகளில் தெருத்திண்ணை விளையாட்டில்
திரிந்திட்ட என்னுள்ளம் தெய்வமே! முதன் முதலாய்
உன்னுருவைக் கண்டதுமே உன்மத்த மாயிற்று.
மிஞ்சுமனப் பிச்சி யென்னுள் பேரின்பம் பொங்கிற்று;
அன்றுமுதற் கொண்டு அடியாள் உனையன்றி
ஒன்றும் அறியேன், உன்னடிக்கீழ் வாழ்ந்திட்டேன்.
அஞ்சாறு நாள் முன்னால் அவன் வந்தான்; அவன் கண்ணில்
ஆசைக்கடல் கண்டேன்! அதனூடே காதலெனும்
நேசங் கனிந்தலரும் நீலோத்பலம் கண்டேன்!
கண்சுழட்டி என்னைக் கணநேரம் நோக்கிநின்றான்;
கண்காட்டிக் கைகாட்டிக் கனிவாய் நகைபுரிந்தான்;
கன்னியெனை ஏதோ கலக்கிற்று! அன்றுமுதல்
நாள்தோறும் என்னை நாடிவந்தான்; நானவனை
வெறுக்கவில்லை; என்றாலும், விருப்பாய் ஏற்கவில்லை.
கொஞ்சினான் கெஞ்சினான் கோபம்போல் பாவித்தேன்.
மிஞ்சுவான் போல நின்றான்; மிஞ்ச விடவில்லை;
என்றாலும், என் நெஞ்சம் அவனோடே ஏகிற்று!
"உன்னை மறக்கவில்லை; உன்னடிமை, உன்குழந்தை,
உனக்கே உரியவள் நான் ஆனாலும், உத்தமியே!
அவனை மறப்பதற்கும் ஆகவில்லை; என் செய்வேன்?
யாவும் அறிவாய் நீ! யாதும் அறியேன் யான்.
காதலென்பார்: கேட்டதுண்டு, கண்டதில்லை; நேற்றைக்குக்
"காதலி! என்னுடைய காதலை நீ ஏற்றுக்கொள்;
காதல் வேண்டாமென்றால் சாதலை நீ ஏற்றுக்கொள்"
என்றென் அடிவீழ்ந்தான்! இல்லாத காதலுக்காய்
எத்தனையோ பேர்கள் இறந்தாராம்; எப்படி நான்
தடுப்பதம்மா? தடுப்பதன்முன் தாவியெனைக் கைப்பிடித்தான்.
பிடித்தகையை முத்தமிட்டான்! பேசாதிருந்து விட்டேன்.
அணையவந்தான்: அதைமட்டும் அடியாள் தடுத்துவிட்டேன்!
கல்யாணம் கட்டிவிட்டால் காதல் பிழையில்லையாம்!
என்னை மணம்புரிவேன் என்றவனும் ஆணையிட்டான்.

Koviloor Academy

'ஆண்கள் கொடியவராம்; ஆணவத்தால் பொய்யுரைப்பார்;
ஆசைமிகக் காட்டி மோசங்கள் செய்வாராம்'
என்றுரைத்தல் கேட்டுள்ளேன்; என்றாலும், இவனிடத்தே
சந்தேகம் தோன்றவில்லை, தாயே! மற்றவர்கள்
எப்படியோ யான் அறியேன்; இவன் மட்டும் பொய்யனல்லன்!
அம்மா! நீயவனை அறியாயோ? மூந்தாநாள்
உன்னைப் பணிந்தங்கே ஒதுங்கி நின்றான்; அவ்விளக்கின்
வெளிச்சத்தில் அவன் முகந்தான் பளிச்சென்று தோன்றியதே?
பக்தியிலே யக்கண்கள் பரவசமாய்த் துள்ளினவே!
நீ பார்க்க வில்லையா? நின்மலமே! இன்றிரவு
என்னை அழைத்தேக இங்கு வரப் போகின்றான்!
போவதா, இருப்பதா, ஒன்றும் புரியவில்லை.
மகளென்றால் தாய்மார்கள் மணஞ்செய்து பார்ப்பார்கள்;
உலகத்து வழக்கமிது, உத்தமியே! என்னுடைய
தாயாவாய் நீயன்றோ? தமியேனுன் மகளன்றோ?
எனக்கும் மணஞ்செய்து ஏற்றமுறக் காண்பாயோ?
இல்லையேல் ஒரு வார்த்தை இப்போதே சொல்லிவிடு;
போ என்றால் போகின்றேன்; இல்லையென்றால் போகவில்லை;
ஒரு வார்த்தை—?"

[வெளியில் குதிரைகள் வரும் ஸப்தம்]

—"ஆஹா ஹா! ஓடிவரும் குதிரைகளின்
காலடியின் ஸப்தம் உன் காதுக்குக் கேட்கலையா?
வந்து விட்டானம்மா! வார்த்தையொன்று சொல்லாயோ?
இப்போது குதிரைக் குளம்போசை யில்லையம்மா!

[படியேறி ஆள் வரும் அரவம்]

படியேறி வருகின்றான்! ஒரு வார்த்தை பகராயோ?
வந்து விட்டான், நிற்கின்றான், வாயிற் படியருகே!
ஒரு வார்த்தை—ஒரு வார்த்தை!

[கதவு தட்டும் ஸப்தம் கேட்கிறது.]

—ஒரே ஒரு ஜாடை!"

Koviloor Acadamy

காஞ்சனன் :

(அகவல்)

காமினி !

காமினி :

காஞ்சனா !

காஞ்சனன் :

காதலி !

காமினி :

காதலா !

காஞ்சனன் :

சீக்கிரம், சீக்கிரம் ! கதவைத் திறப்பாய் !

காமினி :

பொறு பொறு : ஈஸ்வரி ! போவதா ? இருப்பதா ?
ஒரு சொல்—ஒரு குறி—ஒரு சிறு ஜாடை !

காஞ்சனன் :

காமினி ! காமினி !

காமினி :

காஞ்சனா !

காஞ்சனன் :

காதலி !

ஏனோ தாமதம் ? இதயமாம் வண்டு
நின்முகத் தாமரை மலரிலே நிறைந்த
அழகுத் தேனை யருந்திட வேண்டிச்
சிறகடிக் கின்றது, சீக்கிரம் சீக்கிரம் !

காமினி:

இதோ வருகின்றேன் ! ஈஸ்வரி ! திறப்பதா ?
ஒரு சொல்— ?

காஞ்சனன் :

காதலீ !

Koviloor Acadamy

காமினி :

ஒரு கணம் பொறுப்பாய்!
திறப்பதா? மறுப்பதா? தேவீ! ஒரு சொல்!
ஒரு சொல்; இலேயேல் ஒரு குறி காட்டாய்!

காஞ்சனன் :

காதலீ! சீக்கிரம் கதவைத் திறப்பாய்!
ககனத் தாரகை கண்மறைகின்றன!

காமினி :

பொறு! பொறு!

காஞ்சனன் :

காதலீ! போதும், போதும்;
கீழ்த்திசை வானில் கிற்றெளி கிறுக்கும்;
சீக்கிரம், சீக்கிரம்—!

காமினி :

தேவீ! ஒருகுறி:
உன் முகம் படரும் ஒளிநிழல் ஓரிழை
சாய்ந்தால் போதும்; தமியேன் போகேன்!

காஞ்சனன் :

காதலீ! இன்னும் காதமோர் மூன்று
கடந்திட வேண்டும்; கதவைத் திறப்பாய்!
பொழுது கழிந்தது; எழுரிஷி மண்டலம்
எங்கோ மறைந்தது —?

காமினி :

இரு இரு! ஒரு கணம்!
உன்சுடர் மாலேயி லொருமலர் ஒதுங்கி
உன்னடிக் கணியா யுதிர்ந்தால் போதும்!
போகே னம்மா—!

காஞ்சனன் :

போது கழிந்தது;
காதலீ! சீக்கிரம் கதவைத் திறப்பாய்!
ஏனோ தாமதம்?

Koviloor Acadamy

காமினி :

இல்லே, வந்தேன் !
பின் என் தாயே ! உன்னைப் பிரிந்து
அடியேன் போகவா ? அதையேனும் சொல் !

காஞ்சனன் :

காதலீ ! காதலீ !

காமினி :

கணத்தில் வருவேன் !

காஞ்சனன் :

கணம், கணம் ; நாழிகை ஒன்று கழிந்தது !

காமினி :

இரு இரு வருவேன்!

காஞ்சனன் :

எத்தனை நாழி ?

காமினி :

அன்னையே ! போகவா ? அதுவா முடிவு ?
ஆயின் அடியாள் அடைக்கலம் ; அவனே
கதவை உடைப்பான் போலக் கத்துருன் !
நீயே கர்த்தா ; நான் உன் கருவி.
போகவா ? ஆனுல் போகிறேன் தாயே !
இந்தா ! இந்த உடைகளை ஏற்பாய்.
எனக்கவன் சரிகை இழைத்த பொன்னுடை
கொடுத்திருக் கின்ருன் ; கோயிற் சாவிகள்
யாவு மிதோவுன் னடியிணைக் கருகே
வைத்திருக் கின்றேன் ; மலரடிக் கணியாம்
இம்மல ரொன்றே எனக்கெனக் கொள்வேன் ;
என்றும் இதனை இதயமா மலராய்ப்
பூசனை புரிவேன் ; போய் வருகின்றேன் !
தாயே ! உன்னைத் தனியாய் விட்டுப்
போகவா ? ஐயோ, புழுங்குதென் நெஞ்சம் !
அம்மா ! அடைக்கலம் ; அடியாள் உன்மகள் !
அவனுடன் போவேன் ; ஆயினும் உன்னை

Koviloor Acadamy

ஒரு கணமேனும் மறவேன், உண்மை!
உன்னை மறந்தால் உயிரை விடுவேன்;
போய் வருகின்றேன்; போற்றிநின் பொன்னடி!
அடைக்கலம் அடைக்கலம் அம்மா! நீயே
என்குல தெய்வம், இதுவே என்னகம்;
பிறந்தகம் நீங்கிப் புக்ககம் செல்லும்
பேதையென்னை வாழ்த்துதி பெரியோய்!
என்னித யத்தே என்றும் வாழுதி!
போய்வரு கின்றேன் விடை கொடு!—

காஞ்சனன்:

போதும்

கழிந்தது! உதயக் கதவம் திறக்கும்
நேரமா யிற்று; கீழ்த்திசை நெருக்கில்
வெள்ளி முளைக்கும்; வானம் வெளுக்கும்,
இன்னுமா தாமதம்? இக்கதவம் திற!
இதயக் கதவமும் திறந்தெனை ஏற்பாய்,
சீக்கிரம்! சீக்கிரம்! —

காமினி:

திறந்தேன்!

[கதவைத் திறக்கிருள்]

காஞ்சனன்:

ஆஹா!

இன்பம் —இன்பம்— இதுபே ரின்பம்!
உன்முகப் பொன்மதி கண்டவ் வெண்மதி
ஒதுங்கியோர் மேகப் பொந்திடை ஒளிக்கும்!
தாரா கணங்கள் தழல் விளக் கேந்தி
வரவேற் கின்றது, வாவா காதலி!

[கட்டி யணைக்கின்ருன்.]

———

Koviloor Acadamy

களம்-உ: காட்சி-க

[மறுநாள் விடியற்காலம். கோயிலில் ப்ராதக் கால பூஜைக்காக தேவியின் ஸந்நிதியைச் செப்பனிட, இரு கன்யாப் பெண்கள் காமினிக்கு உதவிசெய்ய வருகின்றனர். வெளியில் திருப்பள்ளி எழுச்சிப் பாட்டுக் கேட்கின்றது. பீடத்தில் தேவியின் விக்ரஹத்தைக் காணோம்; பீடத்தருகில் காமினி நிற்கிருள்; தேவியே யவள்!]

முன்னவள் :
ஹா!

பின்னவள் :
என்ன?

முன்னவள்:
காணோம்!

பின்னவள்:
யாரை?

முன்னவள்:
தேவியைக் காணோம்!

பின்னவள்:
தேவியைக் காணோம்!
என்ன நீ சொல்வது?

[இவ்வாறு கூறியவாறே பின்னவள் முன்னால் ஓடி வருகிருள்]

முன்னவள் :
சொலலுவ தென்ன?
பாரேன் நீயே!

பின்னவள் :
பார்த்தேன், ஐயோ!
யாரிது செய்தார்?

முன்னவள் :
யாரா? அவள் தான்!
திருட்டு] விழியும் மருட்டும் பார்வையும்
கொண்டதோ நிற்கும் கோடரிக் காம்பு;
இவளே திருடினுள்; இதிலென் ஸம்ஸயம்?
நேற்றிவள் காவல்!

பின்னவள் :
நீலியே! பேயே!
நீயா அன்னையின் நிலயம் திருடினுய்?

Koviloor Academy

கூறுனே மற்றோர் கொல்வதன் முன்னம்!

முன்னவள் :

வீண்பேச் செதற்கு? விரைவில் தலைவியைக்
கூட்டிவா; நடந்த செய்தியைக் கூறு;
சீக்கிரம் சீக்கிரம்!

பின்னவள் :

ஆஹா! ஜாக்ரதை
தந்திரம் மிக்கவள் தப்பிடா வண்ணம்
கவனமாய்க் காத்திடு!

முன்னவள் :

காப்பேன், போ போ!

[பின்னவள் போகிருள் — முன்னவள்]

சோதரி! உண்மையைச் சொல்லிடு —

[காமினி பதில் கூற வில்லை]

தேவியை
எங்கொளித் துள்ளாய்? எடுத்து வா! மற்றோர்
வருமுன் அவளை மணிப் பீடத்தில்
கொலுவைத் திடுவோம் கூறு!

[பின்னும் மௌனம்]

ஓகோ!
மயிலே மயிலே யென்று வணக்கம்
செய்தால், மயிலும் சிறகைத் தருமோ?
மற்றோர் வன்மொழி வாளிசைத் துன்னைக்
கூற்றினுக் கிரையாய்க் கொடுக்குங் காலைக்
கூறுவாய் போலும்? கொடியள், கொடியள்!

[பின்னும் மௌனம்]

பேச மாட்டாயா? பேயே! உன்னைக்
கண்டங் கண்டமாய் வெட்டிக் காலும்
தலையும் வேறாய்ச் சாய்த்தா லென்ன?

[அப்போதும் பதிலில்லை; தலைவியும்
மற்றோரும் வருகின்றனர்.]

தலைவி :

அந்தோ! என்னுடை யன்னை எங்கே?

Koviloor Acadamy

எங்கே ஈஸ்வரி? எங்கே என்தாய்?
காலிப் பீடம் காண என் கண்கள்
எத்துணைப் பாவம் இழைத்ததோ, அறியேன்!
அழிந்தது ஜீவியம்; விழுந்தது மேன்மை;
கழிந்தது பக்தி, ஒழிந்தது சீலம்!
அம்மா! அம்மா! எங்குளா யம்மா?
கள்வன் நின்னைக் கவர்ந்திடும் போதவன்
கண்ணவிந் திட்டதா? கைகுறைந் திட்டதா?
யாரே அன்னையைத் திருடினர்-?

முன்னவள்:

...யாரா?

இவள் தான்!...

தலைவி:

இவளா?

முன்னவள்:

பின் யார்? இவளே!

நேற்றிவள் காவல்...

தலைவி:

ஓகோ!

மற்றொருவள்:

நீலி!

முன்னவள்:

ஒன்றும் அறியா ஊமச்சி போலப்
பாசாங்கு செய்து பசப்புறுள்—

வேறொருவள்:

பரத்தை!

பின்னொருவள்:

திருட்டுப் பேயள்!

வேறு

புரட்டுக் கணிகை!

வேறு

கசட்டு நெஞ்சக் கபடி!

Koviloor Acadamy

வேறு

கள்ளி!

வேறு

குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்பு!

வேறு

கலத்தை யழிக்கும் நச்சுடைப் பாம்பு!

தலைவி

போதும் போதும் தீச் சொலின் புகைச்சல்!

ஒருவள்

அமைதி, அமைதி, தலைவியின் ஆக்ஞை!

தலைவி

குழந்தாய்! உண்மையைக் கூறு; நீயா
தேவியின் வடிவைத் திருடினை?

[காமினி மௌனமாய் நிற்கிருள்]

அஞ்சேல்!

உண்மையைக் கூறினல் உயிரைக் காப்பேன்!

[பின்னும் மௌனம்]

குழந்தாய்! உனைத்தான் கேட்கிறேன்; கூறு!

[பின்னும் மௌனம். அப்போது வேறொருவள்
முன்வந்து, தலைவியைப் பணிந்து]

வேறொருவள் :

அன்னய்! இவளது ஆடைக் குள்ளே
யாதோ மின்னுது!

தலைவி

ஆமாம்! ஆமாம்!

[பரிசோதிக்கத் தேவியின் பொற்
கவசம் வெளிப்படுகின்றது]

ஆஹா! அன்னையின் பொன்னுடைக் கவசம்
ஒளித்து வைத் துள்ளாள்; ஓஹோ!
இவளே திருடி; இனியென் ஐயம்!

ஒருவள்

கொல்லுமின்!

Koviloor Academy

மற்ருருவள்
வெட்டு மின்!
பின்னெருவள்
குத்துமின்!
வேருருவள்
குடைமின்!
வேறு
நோண்டுமின் கண்ணை!
வேறு
நொறுக்குமின் உடலை!
வேறு
தோண்டு மின் மூளையை!
வேறு
துவையலாய்த் துகைமின்!
தலைவி
அமைதி! அமைதி!
ஒருவள்
அமைதி! அமைதி!
அன்னையின் ஆக்ஞை!
தலைவி
அன்புள குழந்தாய்!
தெரியாத் தனத்தால் தேவியைத் திருடினுய்;
குற்றம் பொறுப்போம்! உண்மையைக் கூறு;
எம்முடை யன்னையை எங்கொளித் துள்ளாய்?
[பதிலில்லை; மௌனம்]
உயிர்ப்பிச்சை யளிப்பேன்; உண்மையைக் கூறு.
[மறுபடியும் பதிலில்லை; மௌனம்]
காதடைத் தனவா? கண்ணிருண் டனவா?
வாயடைத் ததுவா? வார்த்தை யில்லையேல்
கையால் ஜாடைகள் காட்டுதி, போதும்!
[காமினி அசையாது, பேசாது நின்ருள்]
சீ சீ! பேயே! சிறிது போதேனும்
இனியென் கண்முன் எதிர்நின் றிடாதே!

Koviloor Acadamy

போ, போ, போ! சிவன் புனிதக் கோயிலில்
உள்ளார் உனக்கு உரிய தண்டனை
இயற்றுக; இவளை இழுத்துச் செல்லுமின்!

ஒருவள்

இவளுட லெங்கும் இரத்தக் களறியாய்ப்
புண்ணும் வண்ணம் புழுதியி விழுத்துச்
செல்வோம் தோழிகாள்! சீக்கிரம் சீக்கிரம்!

வேறொருவள்

வாராய்! ஏனோ மயங்கி நிற்கின்றாய்?

பின்னொருவள்

மயக்கமென்? கன்னம் வீங்கும் வண்ணம்
காலறை கொடுத்தால், தானே நடக்கிறாள்!

முன்னவள்

வாடீ! வஞ்சக நெஞ்சகீ! வா, வா!

——

Koviloor Acadamy

களம்–உ : காட்சி–உ

[காமினியைக் கையையும் மேனியையும் கயிற்றல் கட்டித் தெருவில் இழுத்து, ஈஸ்வரன் கோயிலுக்குச் செல்லுகின்றனர்.]

ஒருவள்

ஐயோ பாவம்!

ஒருவள்

யாரிவள் ?

வேறு

என்ன செய்தாள் ?

வேறு

எத்துணை அழகு!

வேறு

ஏன் இக் கொடுமை ?

வேறு

குற்றம் என்னவோ ?

வேறு

குற்றமா ? சேச்சே!

ஆடை கிழிக்தும், அணிகள் குலேக்தும்
பிடை மேனியில் ரத்தம் பீறியும்
அம்முகத் தலரும் அமைதியைக் காணுய்!

வேறு

ஆ, கண்ணிணே கக்கும் விண்ணெளி காணுய்!

வேறு

இப்பெண் மணிக்கா இத்துணைத் துன்பம் ?

வேறு

பாவம், பாவம்!

வேறு

என்னே பரிபவம்!

வேறு

கன்னி மாடத்துப் பெண் ணிவள்!

வேறு

அந்தோ!
கன்னியர் நெஞ்சில் கருணை இல்லையோ ?

ஒருகன்னி :

அன்பீர்! கேண்மின் :

Koviloor Acadamy

மற்ருெருவள்

அமைதி! அமைதி!

முன்னவள்

இவளுக் காக இரக்கப் பட்டு
கண்ணீர் உகுக்கும் கருணை மாந்தர்காள்!

ஒருவன்

இனிமையாப் பேசுஞர்!

வேறு

இருடா கேட்போம்!

முன்னவள்

எம்மைச் சேர்ந்தவள் எனினும், இவளைச்
சோதரி என்று சொல்லவாய் கூசுது:
காண்பதற் கினியள்; கருத்தோ கொடிது!

ஒருவன்

இல்லை! இல்லை!

வேறு

இருக்கும்! இருக்கும்

முன்னவள்

பட்டு மேனியள்; பாம்பின் நெஞ்சினள்;
பசுத்தோல் போர்த்த புலியிவள், பாவி!

ஒருவன்

இருக்குமா?

வேறு

இருக்கலாம்!

வேறு

இருமே கேட்போம்!

முன்னவள்

இன்னவள் குற்றம் எடுத்துரைக் கின்றேன்:
எம்முடைத் தேவி, எமக்கும் உமக்கும்
வீட்டுத் தெய்வமாய், நாட்டின் தெய்வமாய்,
விளங்கும் அன்னையின் விக்ரஹம் திருடினள்!

ஒருவன்

இவளா?

வேறு

இருக்காது!

Koviloor Acadamy

வேறு

ஏனிருக்காது ?

மின்னுவ தெல்லாம் பொன்னல ; மாதர்
நெஞ்சின் ஆழம் நினைக்கவு மரிது!

முன்னவள்

நேற்றிராத் தேவியின் நின்மல வடிவம்,
சோபித மாகத் துலங்கிய தின்று ;
காலையிற் பீடம் காலியாய்க் கண்டோம் !

ஒருவள்

அன்னையா காணோம் ?

வேறு

அந்தோ கொடுமை !

வேறு

என்ன உற்பாதமோ ?

வேறு

ஏது நேருமோ ?

வேறு

அகப்பட்டு விட்டதா ?

முன்னவள்

அதுதான் இல்லை!!

நேற்றிரா இவளின் காவல் ; நிசை,
என்னினைத் தாளோ, அன்னையைத் திருடினள் ;
எங்கொளித் தாளோ, இவளுடைக் குள்ளே
அன்னையின் பொன்னுடை யணிகள் யாவும்,
அன்னைக் கெப்படி எப்படி யணிவமோ
அப்படிக் கப்படி யணிந்துகொண் டிருந்தாள் !

ஒருவள்

ஆஹா, பாதகி !

வேறு

காதகி !

வேறு

அதர்மப் பாதகி !

வேறு

ஆந்தையைப் போல அசடாய் விழிக்கிறள் !

Koviloor Acadamy

வேறு

மாந்தரை மயக்க வந்தவல் லரக்கி!

வேறு

மொகரையில் குத்து!

வேறு

முழிகளை நோண்டு!

முன்னவள்

இப்போ திவளை ஈஸ்வரன் திருமுன்
கொண்டுசெல் கின்றோம்; ஆங்குள குருமார்
விசாரித் தேற்ற தண்டனை விதிப்பார்.
ஆகையால் வழிவிட் டகலு மின்!

ஒருவன்

ஆக்ஞை!
நாங்களும் வருகிறோம்; நடவும் போவோம்!

வேறு

போவோ மிந்தப் புழுக்கையைச் சிதைப்போம்!

வேறு

கொல்லு மின்!

வேறு

வெட்டு மின்!

வேறு

குத்து மின்!

வேறு

குடை மின்!

வேறு

கல்லுமின், கடிமின்!

வேறு

கழுதைமேல் ஏற்றுமின்!

———

Koviloor Acadamy

களம்-உ : காட்சி-ந

[ஈஸ்வரன் திருமுன்—காமினியின் விசாரணை]

தலைவர்

குழந்தாய்! உந்தன் குற்றம் பொறுப்போம் ;
உண்மையைக் கூறு !

[பதிலில்லை — மௌனம்]

ஒரு முறை கேட்டோம் ;
மறுமுறை கேட்கிறோம் ; வாஸ்தவம் யாது ?
அன்னையைத் திருடி யாரிடம் கொடுத்தாய் ?
உள்ளதைக் கூறு !

[மறுபடியும் மௌனம்]

ஒருமுறைக் கிருமுறை
கேட்டோம் ; மூன்றும் முறையும் கேட்கிறோம் ;
நடந்தது என்ன ?

[மறுபடியும் மௌனம் தலைவர் கோபத்தோடு தண்டனை விதிக்கிறார்]

நம்மை மதித்திலை!
நமக்கெலாம் தெய்வம் நம்பனை மதித்திலை !
நமனையே மதித்தாய், நாசம் வேண்டினாய் ;
அடாச் செயல் செய்தாய், படாதும் படுவாய் ;
இன்னும் ஒரு முறை பொறுப்போம் ; இப்பவும்
உண்மையைக் கூறிலை, உனைவிடு விப்போம் !

[பின்னும் மௌனம்]

கேட்டுப் பயனிலை, கிழ்மகள் ! அன்பீர் !
இவளுக் காக இரங்குதல் பேதமை ;
கம்பத் திடையே கட்டுவீர் ; குதிரைச்
சாட்டையால் நூறு சவுக்கடி தருவீர் ;
அதற்கும் அசைந்தில ளாயின், பின்னர்
நகக்கணில் ஊசிகள் நாட்டுவீர் ; அதையும்
சகித்தா ளாயின், சதையைத் துண்டு
துண்டாய்க் கிழிப்பீர் ; தோலினை உரிப்பீர் ;
பின்னரும் அவளது பிடிவா தந்தான்
குறையவே யில்லை யென்றால், கொல்வீர் !
இதுவென் கட்டளை ; இப்பொழு தேயதை
நிமைப்பின் முன்னே நிறைவேற் றிடுவீர் !

Koviloor Academy

[காமினியாம் ஈஸ்வரியைக் கம்பத்தில் கட்டுகின்றனர்! குருமார்களில் ஒருவன் அவளை அடிப்பதற்காகச் சாட்டையை ஓங்குகிருன்! அவ்வளவுதான்: இடி இடிக்கிறது! மின்னல் வெட்டுகிறது, இருள் மூடுகிறது, பூமி தம்பிக்கிறது, எங்கும் பயங்கரமான கூச்சல்! இவ்வளவும் ஒரு கணந்தான்; மறுகணம் எங்கிருந்தோ இனிமையான ஸங்கிதம், கேட்கிறது, வானத்துத் தேனிசை! வர வர அச் சங்கிதம் அரோஹணக்ரமத்தில் உச்சஸ்தாயியை அடைகிறது! திடீரென்று எங்கணும் பேரொளி, வான துந்துபி முழங்குகிறது. பூமழை பொழிகிறது; கோயிற் சிலைகளெல்லாம் கும்பிட்டு வணங்குகின்றன! ஈஸ்வர விக்ரஹம் உயிர்பெற்று ஒளி வடிவாகி, ஈஸ்வரியாம் காமினியிடம் வருகிறது; காமினியின் கட்டுகளெல்லாம் தாமாய்க் கழன்றன. அவளது மேனி தேஜோன்மயமாய்ப் பிரகாசிக்கின்றது. ஈஸ்வரனும் ஈஸ்வரியும் அணைகின்றனர். அடுத்த கணம் ஈஸ்வரன் மறைகின்ருர்; ஈஸ்வரியும் மீண்டும் காமினியாய்க் காட்சியளிக்கின்ருள்! ஓம்!]

ஒருவள்

ஆஹா! தண்டனை!

வேறு

அந்தோ! அந்தோ!

வேறு

என்ன உற்பாதம்!

வேறு

எங்கணு மிருட்டு!

வேறு

இடி இடிக்கின்றது!

வேறு

படி குதிக்கின்றது!

வேறு

வெட்டுமின் வீச்சில் விழிகள் பிதுங்குது!

வேறு

கையி லிருந்த சாட்டையைக் காணேம்!

Koviloor Acadamy

வேறு

இல்லை யில்லை, இன்னிசை யின்னிசை !

வேறு

எங்கணும் இன்னிசை !

வேறு

எங்கணும் பேரொளி !

வேறு

ஆஹா ! அதிசயம் !

வேறு

அதிசயம், அதிசயம் !

வேறு

பூ மழை பொழியுது !

வேறு

பொன் மழை பொழியுது !

வேறு

துந்துமி முழங்குது !

வேறு

தூயவள் ! தூயவள் !

வேறு

காமினி தூயவள் !

வேறு

காமினி பக்தை !

வேறு

காமினியே எம் கண்கண்ட தெய்வம் !

வேறு

காண் !காண் ! கட்டுகள் தாமாய்க் கழலுது!

வேறு

ஆஹா ! அதிசயம் !

வேறு

அதிசயம் ! அதிசயம் !

வேறு

காமினி காணேம் ! கண்கொளாக் காட்சி !

வேறு

நாலு கரத்தளாய் நாயகி நிற்கிருள் !

வேறு

அன்புத் தெய்வமாம் அம்பிகை நிற்கிருள் !

வேறு

இன்பத் தேவியாம் ஈஸ்வரி நிற்கிருள் !

Koviloor Acadamy

வேறு

அற்புதம்! அற்புதம்!

வேறு

ஆனந்தக் காட்சி!

வேறு

தேவர்கள் வந்தனர்!

வேறு

தேவியர் வந்தனர்!

வேறு

வான்சிறகார்த்து! வானவர் வந்தனர்!

வேறு

ஆஹா! ஆஹா!

வேறு

அற்புதம்! அற்புதம்!

வேறு

பார், பார்! ஈஸ்வரன் படிவம் உயிர்த்தது!

வேறு

ஒளியுரு வாகி ஓங்கி யுயர்ந்தது!

வேறு

படிமிசைப் பாதம் பெயருதல் பாராய்!

வேறு

அதிசயம்!

வேறு

அற்புதம்!

வேறு

ஆனந்தம்!

வேறு

ஆஹா! கண் பெற்ற இன்பம்!

வேறு

கரையிலாக் களிப்பு!

வேறு

வானவர் யாவரும் வாழ்த்தி வணங்கினர்!

வேறு

கோயிற் சிலையெலாம் கும்பிடு கின்றது!

Koviloor Academy

வேறு

சித்திர மெல்லாம் சிரமசைக் கின்றன !

வேறு

ஈஸ்வரி நிற்கிருள் ! ஈஸ்வரன் வந்தார் !
இருவரும் இணைந்தார் ! இன்பம் இன்பம் !

வேறு

ஆனந்தம் !

வேறு

பரமானந்தம் !

வேறு

ஆஹா !
கணத்திற் கரைந்தது கடவுளின் காட்சி !

வேறு

தெய்வம் மறைந்தது ! தேவியும் மறைந்தாள் !

வேறு

இல்லை, இல்லை, இவளே தேவி !

வேறு

கற்பின் தெய்வம், காமினி கடவுள் !

வேறு

அம்பிகை இவளுள் ஆவிர்ப் பவித்தாள் !
யாவரும் கண்டோம் ! யாவரும் பணிவோம் !
வாரும் வாரும் வணங்குவோம், வாரும் !

யாவரும்

அன்னய், அன்னய் ! அடைக்கலம், அடைக்கலம் !
அடியேம் குழந்தைகள் ஆதரித் திடுவாய் !

தலைவி

அன்னையே, அன்னையே, அடைக்கலம் அடைக்கலம் !
சின்னப் புத்தியால் சிறுமைகள் செய்தேன்.
யாவையும் பொறுப்பாய் !

குரு

அம்பிகே, தாயே !
அடியேன் சிறுவன், அறிவிலி, அசடன் ;

Koviloor Acadamy

பெருமை யறியேன்; பிழைகள் புரிந்தேன் ;
பொறுத் தருள் !

காமினி

போதும் போதும் ! நானோர்
ஏழைச் சிறுமி ; என்னைப் பணிவதேன் ?
அன்னையைப் பணிவோம், யாவரும் வருக !

தலைவி

ஆஹா ! போவோம் !

குரு

யாவரும் போவோம் !

அன்னையின் பின்னால் அணிவகுத் திடுக !

[எல்லோரும் வெளியேறுகின்றனர்; வாயிலில் நோயாளிகளின் கும்பல் ; ஈஸ்வரியைக் கண்டதும் நோய்கள் நீங்கின.]

குருடன்

அற்புதம், அற்புதம் ! அடியேன் கண்கள்
திறந்தன ! வானம் தெரியுது, தெரியுது !

நொண்டி

கால்கள் நிமிர்ந்தன !

முடம்

கைகள் நீண்டன !

கூனன்

கூனல் தீர்ந்தது !

குட்டன்

குஷ்ட மகன்றது!

தலைவி

பாவம் தீர்ந்தது ; புண்ணியம் பாய்ந்தது !

குரு

துன்ப மழிந்தது! இன்பம் பொழிந்தது !

தலைவி

அற்புதம் அற்புதம் ! அம்பிகை வாழிய !

குரு

காமினி எங்கள் கடவுள் வாழிய !
யாவரும் வாழிய! யாவரும் வாழிய !

——

Koviloor Academy

களம்–ங : காட்சி–க

[இருபத்தைந்து வருடங்கள் கழிந்தன. பழைய கன்யாமாடத்து ஈஸ்வரியின் கோயிலில், இன்று விக்ரஹம் பழையபடி பீடத்தில் வீற்றிருக்கிறது; காமினியின் ஆடையும், சாவியும் – அதனதன் இடத்தில் வைக்கப்பட்டுள்ளன. அன்றேபோல் இன்றும், நடுநிசி. காமினி – பழைய காமினி யல்ல; கந்தை உடுத்தவள்; கிழவி – கதவை மும்முறை தட்டுகிறுள்; கதவு தானுகத் திறக்கிறது; காமினி உள்ளே வந்ததும், தானுக மூடிக் கொள்ளுகிறது. உள்ளே நுழைந்த காமினி ஈஸ்வரியின் பாதத்தில் விழுகிருள்; அழுகிருள்; தொழுகிருள், அங்கலாய்க்கிருள்:]

காமினி

அம்பிகையே! தாயே! அடியாளுன் சிறுகுழந்தை,
அம்மா! உனைப் பிரிந்தேன் ஐயோ! உலகத்தின்
பீடையெல்லாம் கண்டேன்; பிழையாம் வாழ்க்கையிலே!
நான்பட்ட பாடெல்லாம் நரகத்தில் யார்படுவார்?
கால் நொந்தேன், நொந்தேன், கடுகி வழிநடந்தேன்!
யான்வந்த தூரம் அப்பாடா! யார் அறிவார்?
உன்னடிக்கிழ் என்னை ஒப்புவிக்க வேண்டுமென்னும்
பேராசை முன்னிழுக்கப் பித்தவுடல் பின்னிழுக்கத்
தள்ளாடித் தள்ளாடித் தடுமாறி வந்தடைந்தேன்!
என்னை வெறுக்காதே ஏற்றுக்கொள்! ஏற்றுக்கொள்!

[சிவன் கோயில் அர்த்தஜாம மணியோசை]

அன்றே போல் இன்றும் அரைஜாம மணியோசை

Koviloor Acadamy

அடியாளின் வேண்டுதலை அநுநாதம் செய்கிறது.
என்னை வெறுக்காதே, ஏற்றுக்கொள் என்னம்மா!
இன்றைக் குன்னையல்லால் எனக்கோர் கதியில்லை.
உலகத்தில் உள்ளதெலாம் நீ ஒருவள், காறொருத்தி;
உலகத்தில் வேறொன்றும் உள்ளதாய்த் தோன்றவில்லை!
அன்றோ இளஞ்சிறுமி; ஆசையால் உன்னைவிட்டேன்!
இன்றோ பழங்கிழவி; ஏமாறிப் போனவள் நான்!
கூந்தல் வெளுப்பாச்சு; கோணல் முதுகாச்சு;
தோல் சுருங்கி மேல்வாண்டு தொங்கித் துவண்டவுடல்.
கண்மருளும், காதடைக்கும், கைமுடங்கும், கால்மடங்கும்;
பெண்ணல்ல, பேயாய்ப் பிசாசாக வந்தடைந்தேன்;
என்றாலும், என்னை மறுக்காதே; ஏற்றுக்கொள்!

[எக்காள நாதம் கேட்கிறது!]

காளம்இசைத் தென்னைக் காபாற்ற வேண்டுதம்மா!
காலம் கடந்து வந்தேன், கண்மன் தெரியவில்லை;
கொடுப்பதற் கொன்றுமில்லை; கொள்வதற்கும் சக்தியில்லை;
பூஜை மறந்து விட்டேன், பொன்னடியே சரணம்மா!
யான் செய்த பாவங்கள் ஐயோ! கணக்கில்லை;
விண்ணொளியை விட்டு விளக்கொளியை நாடுகின்ற
விட்டிலைப்போல், நானுமுனை விட்டுப் பிரிந்தேனே!
தேனைப்போ லினிக்குதென்று தீயவிஷம் தின்றேனே!
பளபளப்பைக் கண்டுலகப் பாம்பை யணைத்தேனே!
மின்னுதென்று பித்தளையைப் பொன்னாகக் கொண்டேனே!
ஆசை யறுபதுநாள் என்பார்கள் — அவனுசை
முப்பதாம் நாளைக்கே மோஹமாய்த் தீர்ந்ததம்மா!
அப்பால் எவரெவரோ அடியேனுடல் சுவைத்தார்!
எத்தனையோ குழந்தைகளை யான்கொன்றேன்; என்கருவில்
பிறப்பதற்கு முன்இறந்த பிஞ்சுகள்தாம் எத்தனையோ!
இத்தனைக்கும் நீமட்டும் இதயத்தில் குடியிருந்தாய்!
மட்டைவரட் டோட்டில் மதுப்பொழியும் தேங்காய்போல்,
மேலெமுள் உள்ளேதேன் விளங்கும் பலாக்கனிபோல்
ஒட்டையா மென்னுடலில், உடைந்தமனப் பீடத்தில்

Koviloor Acadamy

வீற்றிருந்தாய்! உன்னை வினையேன் மறக்கவில்லை!
நீ ஒருவளே அன்பின் நிலயமாய் என்னுயிரை
இன்றுவரைக் காத்தாய்; மற்றதெல்லாம் ஏமாற்று!
என்னை வெறுக்காதே ஏற்றுக்கொள், ஏற்றுக்கொள்!

[சேகண்டி ஓசை கேட்கிறது]

சேகண்டி யோசையென்னைக் காப்பாற்றச் செப்புதம்மா!
தில்லிக்கு ராணியுமே தல்லிக்கு மகளென்பார்;
பட்டிப் பழங்கிழவிப் பாவிநான் ஆனாலும்,
குட்டியாய்ப் பேயாய்க் குரங்காகிப் போனாலும்
பெண்ணவளைப் புக்ககத்தார் தள்ளிவிட்டால் பேருலகில்
தாயாரிட மின்றிச் சரணுண்டோ? எந்தனுக்கு
நீயன்றோ தாயார்! நினக்கன்றோ நான் குழந்தை!
யான்செய்த பாவங்க ளத்தனையும் சொல்லிவிட்டேன்;
கண்ணீரால் பாவந்தைக் கழுவினேன்; கழுவுதற்குக்
கண்ணீரும் இல்லையின்று; கண்வரண்டு போச்சுதம்மா!
கடைநாளின் கடைமூச்சைக் காலடிக்கே சமர்ப்பிப்பேன்;
உன்னைக்கண் டுன்னடியில் உயிர்விடவே யிங்குவந்தேன்!
என்னுயிரை ஏற்றுக்கொள்; என்பாவம் மன்னிப்பாய்;
அன்னையே! அன்னையே! அடியாளை ஏற்றுக்கொள்!

[ஸங்கத்வனி கேட்கிறது!]

சங்கம் ஒலிக்குதம்மா! தமியாளை ஏற்றுக்கொள்!

[சுற்று முற்றும் பார்க்கிறாள்]

வெள்ளி முளைத்தாச்சு; விடியும் பொழுதாச்சு;
இன்னும் ஒருவருமே இங்குவரக் காணேமே!
எல்லோரும் எங்குசென்றார்? என்னிடத்தை ஏற்றதுயார்?
வீடுமெழுகி விளக்கேற்றி வைத்தது யார்?
நந்தா விளக்கை நாள்தோறும் காப்பது யார்?
மாலை தொடுப்பது யார்? மணக்கோலம் காண்பது யார்?
திருமேனிக் காடையணிச் சிறப்பெல்லாம் செய்வது யார்?

Koviloor Acadamy

[தன் உடைகளைக் காண்கிருள்]

ஆஹா, இதுவென்ன!

[அவற்றை தொட்டுப் பார்க்கிருள்]

அடியாள் கரமிரண்டும்
ஸ்மரணை யில்லாததினுல் தடுமாறிப் போகிறது.

[உற்றுப் பார்த்து யோஜிக்கிருள்]

நேற்றைக்கு,— இல்லைஇல்லை — நீண்டநாள் முன்பாக,
அன்னையிடம் யான் கொடுத்த ஆடையிது வன்றோ?
ஆச்சரியம்! இத்தனைநாள் யாரிதனை யணிந்தார்கள்?

[அதைத் தானே அணிகிருள்]

அதுவேதான் ஐயமில்லை, அப்படியே யழியாமல்
கோணுமல் கிழியாமல் குலையாமல் இருக்கிறதே!
நீண்டிருக்கு — ஆமாம் — நான் நிமிர்ந்திருந்த போதினிலே
பூண்டவுடை, கூனுடலில் பொருந்துமோ? – பொருந்தாது!

[தேவியிடம் திரும்புகிருள்]

அம்மா! நான் பாவி; இதை அணிந்திடுதல் தவருயின்,
மன்னிப்பாய்; என்மானம் மறைக்க வழியில்லை.!
கட்டியுள்ள கந்தலிலே கண்ணுயிர முண்டு;
பனிவெய்யில் மழையெல்லாம் பதம்பார்த்த திம்மேனி!

*[அப்போது கதவு திறக்கும் ஸப்தம் கேட்கிறது;
காமினி கேட்டு நடுங்குகிருள்!]*

இது வென்ன! எங்கோ ஓர் கதவம் திறக்கிறது!

[உற்றுக் கவனிக்கிருன்]

யாரோ வருகின்ருர்; ஆளரவம் கேட்கிறது!
அம்மா! காப்பாற்று; அடியாள் உனையன்றி

Koviloor Academy

எவரையுமே காணேன்; என் பாவக் கதையெல்லாம் எல்லோரும் அறிவார்கள்; ஆதலினால். என்னுயிரை இப்போதே ஏற்றுக்கொள்; இனியோர் கணந்தரியேன்; இப்போதே, இப்போதே, இப்போதே! ஆ! ஆ! ஆ!

[மூர்ச்சையாய் விழுகிறாள்; தலைவியும் மற்றவர்களும் வருகின்றனர்; புதுக் கன்னிகளைத் தவிர மற்றெல்லோரும் கிழவிகளாய் விட்டனர்; தலைவி, தடியூன்றித் தள்ளாடி வருகிறாள். முதலில் தேவியின் விக்ரஹத்தைப் பார்க்கின்றனர்; பின்னரே காமினியைக் காண்கின்றனர்.]

ஒருவள்

அற்புதம்! அற்புதம்!

வேறு

ஆனந்தக் காட்சி!

வேறு

வியப்பிது! வியப்பிது!

வேறு

விக்ரஹம் மீண்டது!

வேறு

ஆஹா, ஆஹா!

வேறு

அற்புதா னந்தம் !

[ஆனந்தமிக்கு ஆடிப்பாடி மகிழ்கின்றனர்!]

வேறு

வேதம் ஓதுமின்!

Koviloor Academy

வேறு

வீணையை மீட்டுமின் !

வேறு

கீதம் பாடுமின் !

வேறு

கீர்த்திகொண் டாடுமின் !

வேறு

எம்மனை வந்தாள்

வேறு

எம்பவம் தீர்ந்தது !

வேறு

எங்கணும் இன்பம் !

வேறு

பொங்கித் ததும்புது !

[அப்போது ஒருவள் காமினியைக் காண்கிருள்; அவள் கூற மற்ருேரும் காமினியைச் சுற்றிக் கூடுகின்றனர்.]

ஒருவள்

அந்தோ இறந்தாள் !

வேறு

யார் ! யார் ?

வேறு

காமினி !

வேறு

என்ன !

வேறு

காமினித் தேவியா ?

வேறு

எங்கள் அன்புத் தெய்வமா ?

Koviloor Acadamy

வேறு

அன்னையா இறந்தாள்?

[ஒருவள் காமினியின் தலையைத் தன் மடிமேல் தாங்கிக் கொள்கிருள்.]

தலைவி

தெய்வம் கொடுத்தது; தெய்வமே கொண்டது!

ஒருவள்

பார்! பார்! தேகம் பழங்கிழ மானது!

தலைவி

தேவியுள் ளிருந்தாள்; தேகமும் பொன்னாய்த்
திவ்யமாய்ப் பூரண மதியாய்த் திகழ்ந்தது!
தேவி நீங்கினள்; தேகம் சிதைந்தது!

வேறு

ஓரிர விற்குள் உடலம் தளர்ந்தது!

வேறு

உளுத்தது மேனி!

வேறு

வெளுத்தது கூந்தல்!

வேறு

தொங்கின சதைகள்!

வேறு

துவண்டன கால்கை!

வேறு

மங்கின கண்கள்!

Koviloor Acadamy

வேறு

மரணம் வந்தது!

வேறு

இல்லே, இல்லே, இருக்கிருள் தேவி!

வேறு

ஆமாம் ... பார்! பார்! அசையுது மூச்சு!

வேறு

கண்கள் துடிக்குது!

வேறு

கனிவாய் துடிக்குது!

வேறு

மார்பகம் பொங்குது!

வேறு

மாரகம் தீர்ந்தது!

வேறு

ஆஹா! பார், பார்! அன்னேயின் விக்ரஹம்
புன்னகை புரியுது!

வேறு

புன்னகைத் தேனெளி
மின்னலில் பக்தையின் மேனி சிலிர்க்குது!

[காமினி கண்விழித்து, சுற்றும் முற்றும் பார்க்கிருள்; கனவினின்று விழித்தாற்போல பேசுகிருள்.]

காமினி

இதுவென்! அடியாள் எங்கிருக் கின்றேன்?
இறந்து விட்டேனே? இஃதெவ் வுலகம்?
யாவர் நீங்கள்?

Koviloor Acadamy

தலைவி

அன்னையே! அன்னையே!
இதற்குளா எங்களை மறந்தாய்? யாங்கள்
நின்னுடைப் பக்தர், நின்னடிச் சேவகர்!

காமினி

ஆமாம்! இதுவென் அன்னையின் கோயில்
அறிந்தேன்; நீவிர் யாவரும் கன்னிமார்;
என்னுடைத் தோழிகள்; ஆயினும், என்னைப்
பார்ப்பதும் பாவம்; அடியாள் பதிதை!

தலைவி

என்னுரைத் தனை? நீ எங்களின் தெய்வம்!

காமினி

அன்னாய்! என்னை யறிந்திலை போலும்!
அடியாள் காமினி!

தலைவி

அறிவோம்! அறிவோம்!
நீயே எங்கள் அன்பின் நிலயம்!

[பாதங்களில் சிரந்தாழ்த்தி வணங்குகிருள்.;
காமினி, பதைபதைப்போடு ....]

காமினி

ஐயோ! இதுவென் னனுசிதம்? அகல்வீர்!
என்னுடைப் பதங்க ளின்பமென் றெண்ணிப்
பாவப் பாதையில் பலமுறை நடந்து
பழியாஞ் சேற்றில் பாழ்த்துப் போனது!

Koviloor Acadamy

தலைவி

இல்லை யில்லை ... எங்கள் அம்பிகை
இன்ப வனத்தின் அன்புப் பாதையில்
துன்பம் துடைக்கத் தோன்றிய திப்பதம் !

[வேறொருவள், கையை முத்தடுகிறாள்!]

காமினி

சீ ! சீ ! விடு விடு, சிறுமையிற் றோய்ந்து
எண்ணிலாப் பவங்கள் யாவையும் புரிந்த
இக்கரம் தீண்டேல் !

அவள்

ஏனோ ? இக்கரம்
அம்பிகை யின்னரு ளமுதை எவர்க்கும்
வாரியாய் வழங்கிய வான்கரம் !

காமினி

என்னிது ?
ஏனோ என்னை ஏளனம் செய்கிறீர் ?
நான்தான் காமினி, நான்பெரும் பாவி !
இருபத் தைந்து வருடமுன்...

தலைவி

வாஸ்தவம் !
இருபத் தைந்து வருடமுன் ஈஸ்வரி
உன்னகம் புகுந்தாள் ! உன்னை வாழ்த்தினாள் !

காமினி

இல்லை யில்லை ! இருபத் தைந்து
வருடமுன் மனிசர் வஞ்சனைக் காளாய்க்
காஞ்சன னென்னும் கயவனைக் கூடி
ஓடிப் போனேன்; உணர்ந்திலீர் போலும் !

Koviloor Acadamy

தலைவி

மகளே! இதுவென் மயக்கம்? மாயை
வலையில் நின்மனம் நிலைதடு மாறுது!
ஒரு நாள் — ஒருமுறை — ஒரு கணம் கூட
எங்களை விட்டுநீ பிரிந்ததே யில்லை!

காமினி

இதுவென்? கனவா, நனவா? என்செவி
கேட்பதென் கேலிக் கிறுக்கா? அன்னாய்!
சாவின் வாயிலில் தமியா ளிருக்கிறேன்;
வஞ்சகம் பேசேல்; வாஸ்தவ மென்ன
கூறும்? எத்துணைக் கொடிய தாயினும்
உண்மையைக் கூறும்!

தலைவி

உண்மை! உண்மை!

எங்களை விட்டுநீ என்றும் பிரிந்திலை!

காமினி

அன்னாய்! உண்மையைக் கூறுவாய்! அடியாள்
இருபத் தைந்து வருடமுன் ஒருநாள்
காவலை விட்டேன்; கதவுகள் திறந்தேன்;
கன்னிய ராடையைக் கழற்றி எறிந்தேன்;
அன்னையை நீங்கி யகன் றேன்!

தலைவி

அன்பே!

எங்களை விட்டுநீ ஏகின யென்பது
மட்டும் பொய், பொய்! மனத்தின் மயக்கம்!
மரண மருட்சி! மாயையின் சூட்சி!
ஆயினும்—!

Koviloor Acadamy

இருபத் தைந்து வருடமுன் ஒரு நாள்
தேவி மறைந்தாள்! திருடியென் றுன்னை
ஈஸ்வரன் திருமுன் இழுத்துச் சென்றோம்;
ஆயிரம் குருமார் ஆராய்ந் துனக்குத்
தண்டனை விதித்தார்; தாயே! நின்னைக்
கம்பத் தினிலே கட்டினர்; குதிரைச்
சாட்டையா லுன்னைத் திட்டுதற் காயோர்
குருமகன் நின்றான்; கோலமே யன்று
நடந்ததோ ரற்புதம்! நாவடங்காது!
வானம் மலர்ந்தது; வானொளி பாய்ந்தது;
வான்மலர் மாரி பொழிந்தது; வானிசை
பாய்ந்தது; எங்கும் பரவச மானது!
வானவர் வந்தார் மங்கலம் பாடினர்;
கட்டுக ளெல்லாம் தானே கழன்றன;
அம்பிகை யுன்னுள் ஆவிர்ப் பவித்தாள்!
அன்னையே நீயாய், நீயே யன்னையாய்,
நாலு கரத்தளாய், நான்மறைத் தேவியாய்,
முக்கண் தெய்வமாய், முழுமதி முகத்தோர்
இளமதிக் கிற்றெடும் எழிலுக் கெல்லையாய்,
ஈஸ்வரி யாகி எம்முனே நின்றாய்!

காமினி

என்னிது! நானா ஈஸ்வரி யானேன்?

தலைவி

ஆமாம், ஆமாம், அற்புதம்; அற்புதம்!
பரமன் உயிர்த்தான், பாதம் பெயர்த்தான்;
உன்னிடம் வந்தான், உன்னை யணைத்தான்;
கோயிற் சிலையெலாம் கும்பிட்டு நின்றன!
சித்திர மெல்லாம் சிரமசைத் தாடின!
கணத்திற் கரைந்தது கவினுறுங் காட்சி!
அன்றுதொட் டின்று காறும் அன்னாய்!

Koviloor Acadamy

இமைப்பொழு தேனும் எங்களை நீங்கலே;
அற்புதம் பற்பல காட்டினாய்! அடியேம்
கண்டு வணங்கினோம்! காமினி! காமினி!

[காமினி மரண வாயிலில் கண் மூடுகிறாள், கண்ணைத் திறந்து கனவிற் போல]

காமினி

என்னிது! கனவா? என்னுளம் மருளுது!

தலைவி

அன்னாய்; அன்னாய்! எம்மைவிட் டகலேல்!

காமினி

யாரு ஈஸ்வரி?

தலைவி

ஆமாம், ஆமாம்!
நீயே எங்கள் அன்பின் நிலையம்!
நீயே எங்கள் நெஞ்சக விளக்கு!
நீயே எங்கள் வாழ்வின் நிச்சயம்!

காமினி

இல்லை...இல்லை...ஈஸ்வரி...ஈஸ்வரி!
என்கண் மருளுது! என்னுளம் மருளுது!
என்னுயிர், அன்னையின் இணையடிக் கேகுது!
ஓம்......ஐம்...ஹ்ரீம்...ஸ்ரீம்......ஐம்...க்லீம்...சௌம்...ஓம்
ஓம்......ஓம்......ஸ்ரீம்......ஸ்ரீம்!

[காமினி மடிந்தாள்; அவளுடல் மறைகிறது. தாமரையாய் மாறி அம்பிகையின் பாதத்தை அலங்கரிக்கிறது.]

தலைவி

அன்னை மடிந்தாள்!

Koviloor Academy

வேறு

அந்தோ! அந்தோ!

வேறு

இனிமேல் எம்மை எவரே காப்பார்?

வேறு

ஆஹா! பார் பார்! அன்னையின் விக்ரஹம்!

வேறு

ஆமாம், ஆமாம்! அற்புதம், அற்புதம்!

வேறு

கண்ணொளி விரியுது! புன்னகை புரியுது!

வேறு

காண், காண்! அதிசயக் காட்சியீ தென்னே!
காமினி வடிவம் கரையுது, கரையுது!

வேறு

கமலப் பூவாய் யன்னையின் காலிணை
மேவுது, இன்பமாய் மின்னுது பாராய்!

வேறு

ஆமாம், அற்புதம்!

வேறு

ஆச்சர்ய சம்பவம்!

வேறு

வானம் சிரிக்குது!

Koviloor Acadamy

வேறு

வான்மலர் பொழியுது!

வேறு

தேனிசை பாயுது! தேவர்கள் பாடுவார்!

[தலைவியும் மற்றோரும் அம்மலரைக் கண்ணில் ஒற்றிக்கொள்ளப் போகின்றனர். அது சிலையாய் மாறுகிறது.]

தலைவி

காமினி மாமலர் அன்னையின் காலிணைக்
கணியா யென்றும் அகலா வண்ணம்
தெய்வச் சிலையாய்த் திகழுது காண்பீர்!

யாவரும்

ஆஹா! அற்புதம்! அற்புதம்! அற்புதம்!

தலைவி — மற்றோர்

அன்னை வாழிய! யன்னையின் பக்தை
காமினி வாழிய! கர்சினி வாழிய!
அன்னையி னருளால் யாவரும் வாழிய!

சுபம், சுபம், சுபம்!

முற்றிற்று

Koviloor Acadamy

[விரைவில் வெளிவரும்]

"திருப்புகழ்ச் சாமியார்"

உணர்ச்சி நிறைந்த
அபூர்வ சிறுகதைச் சித்திரங்கள்

ஆசிரியர் :

'சோமு'

விலை ரூ. 2/8

ஓம்கார நூலகம்

புதுக்கோட்டை

Koviloor Acadamy

ஸ்டார் பிரசுரம்

(புதிய வெளியீடுகள்)

1. நண்பர் சுபாஷ்
   ஸ்ரீ டிலிப் குமார் ராய் (அச்சில்)

2. மாந்தேன் சிந்தனைகள் (அச்சில்)

[இவ்விரு நூல்களையும் மொழிபெயர்த்தது, சு. நடராஜன்]

ஸ்டார் பிரசுரம்,
பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி.